25th July 1964]

கனம் திரு. வெ. ராமையா : அந்த விஷயம் பரிசிலனையில் இருக்கிறது. ராமநதி, கடனாநதி இரண்டையும் இணைத்து ஒரே திட்டமாக ஆக்க முடியுமா, அப்படிச் செய்தால் எவ்வளவு பெரிய திட்டமாக இருக்கும் என்பது இப்பொழுது இன்வெஸ்டிகேஷனில் இருக்கிறது.

பம்பு கம்ப்ரஸர் தொழிற்சாலை

* 723 கேள்வி.—**திரு. ஆ. கு. சுப்பையா :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில், பம்பு கம்ப்ரஸர்கள் தொழிற்சாலை ஆரம்பிக்கக்கோரி மத்திய சர்க்கார் மாநில சர்க்காரைக் கேட்டார்களா?

(இ) அந்த வேலை எந்நிலையிலுள்ளது?

THE HON. SRI R. VENKATARAMAN :(*a*) Yes.

(*b*) The Government of India have taken no decision regarding the location of this Project.

Financial aid to agriculturists

* 724 *Q.*—SRI K. A. MATHIALAGAN : Will the **Hon. the** Minister for Food be pleased to state—

(*a*) whether there is any proposal to give financial aid for land reclamation to the agriculturists in the area irrigated by Parambikulam-Aliyar Project in the taluks of Pollachi, Udumalpet, Palladam and Dharapuram; and

(*b*) if so, the details thereof ?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்: (அ) ஆம்.

(இ) பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டப் பகுதியிலுள்ள நிலங்களைச் செப்பனிடுவதற்காக நிதி உதவியளிக்கும் பொதுவான ஒரு திட்டத்தை அரசாங்கம் அங்கிகரித்துள்ளது. இத் திட்டத்தின் கீழ், நில அடமான பாங்குகள் மூலம் ஏக்கர் ஒன்றுக்கு சராசரி ரூ. 600 வீதம், 10 கோடியே 80 லட்சம் ரூபாய் விவசாயிகளுக்குக் கடனாக வழங்க அரசாங்கம் உத்தேசித்துள்ளது. இத் திட்டத்தின் கீழ், சுமார் 1.80 லட்சம் ஏக்கர் நிலங்கள் பயனடையும். வேளாண்மைக்கு மறு உதவியளிக்கும் கார்ப்பரேஷனைக் **(Agricultural Refinance Corporation)** கலந்து இத் திட்டத்தின் விவரங்கள் முடிவு செய்யப்பட்டுவருகின்றன.

2. இத் திட்டத்தை முடிவு செய்வதற்கு முன், மேற்சொன்ன பகுதியிலுள்ள விவசாயிகளுக்கு மத்திய நில அடைமான பாங்கு மூலம், அதன் நிதி வசதிக்குட்பட்டு, கடன்கள் கொடுக்கத் தொடங்கும்படி அரசாங்கம் கூட்டுறவுச் சங்கப் பதிவாளருக்கு உத்தரவு பிறப்பித்துள்ளது.